[*2023 மார்ச் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுங்காலீஸ்வரர் கோயிலுக்கு ஏற்கெனவே கல்மண்டபம் இருக்கின்றது. புதிதாக ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு உபயதாரர் ஒருவர் 50 இலட்சம் ரூபாய் நிதி தரவிருக்கிறார். இன்னும் ஓரிரு மாதங்களில் அதற்குண்டான உத்தரவை வழங்கி, நிச்சயமாக அவர் கோரிய ஐந்து நிலை இராஜகோபுரம் ஏற்படுத்தப்படும்.*

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் 2021–2022, 2022–2023 ஆகிய காலக்கட்டங்களில் சுமார் 31 திருத்தேர்கள் புதிதாகச் செய்வதற்கு ரூபாய் 18 கோடியை ஒதுக்கீடு செய்து தந்தார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திருக்கோயிலுக்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்தேர் கோரியிருக்கின்றார். அந்தத் திருக்கோயிலில் ஏற்கெனவே 6 கோடி ரூபாய் அளவிற்கு வைப்பு நிதி உள்ளது என்ற காரணத்தினால் அந்தத் திருத்தேர் செய்கின்ற பணியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைப் பெற்று இந்த ஆண்டே மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

வியாசர்பாடி, அ.தி.மு.க. நிர்வாகி, திரு. இளங்கோவன் கொலை செய்யப்பட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். நான் கூப்பிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

2023 மார்ச் 29]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். சென்னை, வியாசர்பாடியில், இராணி மெய்யம்மை காலனியைச் சேர்ந்த திரு. இளங்கோவன், வயது 47, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரம்பூர் தெற்குப் பகுதி கழகச் செயலாளராக இருந்து வந்தார். கடந்த 27–3–2023 அன்று இரவு அலுவலகத்தைப் பூட்டிவிட்டு, மோட்டார் சைக்கிளில் வீட்டிற்குச் செல்லும் வழியில், முத்துமாரியம்மன் கோயில் தெருவில் செல்லும்போது, ஆட்டோவில் வந்த 5 நபர்கள் அவரைப் பட்டா கத்தியால் சரமாரியாகத் தாக்கி, கொடூரமான முறையில் கொலை செய்துள்ளார்கள்.*

முற்பகல் 11–10

தாக்குதல் சத்தம் கேட்டு, மக்கள் ஓடி வருவதைக் கண்டு கொலையாளிகள் ஆட்டோவில் ஏறி, தப்பி ஓடிவிட்டனர். கொலையான இளங்கோவன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பெரம்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் ஆவார். இவர் கொலையான தகவல் அறிந்ததும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக நிர்வாகிகள் பெருமளவில் மருத்துவமனையில் கூடியதால், அங்கொரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. மறைந்த இளங்கோவன் அவர்கள், இப்பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாகவும், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டியும், காவல் நிலையத்தில் பலமுறை புகார் செய்துள்ளார். இந்நிலையில் கஞ்சா வியாபாரி சஞ்சய், வயது 19 உட்பட 5 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வந்துள்ளன. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழகத்தில் சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்றாலும், சட்டம்–ஒழுங்கு மிகவும் சீர்குலைந்துள்ளது என்றும், கஞ்சா போன்ற போதைப்பொருட்கள் தாராளமாகக் கிடைக்கின்றன என்றும், காவல் துறை அதிகாரிகள் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை என்றும் நான் சட்டமன்றத்திலேயே பேசியுள்ளேன். எனவே, காவல் துறைக்கு முழு சுதந்திரம் வழங்கி, தவறிழைப்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சட்டமன்றத்தில் வலியுறுத்தியிருக்கிறேன். குறிப்பாக, சென்னையில் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் நடமாட்டம் பற்றியும், இதனால் பள்ளி, கல்லூரி மற்றும் . . .

[*2023 மார்ச் 29*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதுமே, போதும். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *முக்கியமானது இது. மிகக் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை.* Zero hour-*ல், உங்களுக்குத் தெரியாததா? (குறுக்கீடு) சீக்கிரமாக முடியுங்கள். சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சீக்கிரமாகத்தான் முடிக்கிறேன். எவ்வளவு நேரம், இன்னும் ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. எப்படிப் பேசுவது? ஒரு நிமிடம்கூட ஆகவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரண்டு நிமிடங்கள் முழுமையாக ஆகிவிட்டன (குறுக்கீடு) இரண்டு நிமிடங்கள் முழுமையாக ஆகிவிட்டன. (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒரே பக்கம்தான். ஒன்றரை பக்கம்தான் இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அரசாங்கத்திற்கு எதுவுமே கவனத்திற்குக் கொண்டுவரக் கூடாது என்று சொன்னால் எப்படி முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவனத்திற்குக் கொண்டு வருவதை சுருக்கமாகச் சொல்லுங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அதைத்தான் கொண்டு வருகிறேன். குறிப்பாக, சென்னையில் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் நடமாட்டம் பற்றியும், இதனால் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பாதிக்கப்படுவது பற்றியும் பேசியுள்ளேன். கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் விற்பவர்கள் பற்றிய விவரங்களைக் காவல் துறையிடம் புகார் கூறுபவர்கள், தாக்கப்படுவது போன்ற சம்பவங்கள் மாநிலம் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, தெற்கு பகுதி கழக செயலாளர் இளங்கோவன் கொலைக்குக் காரணமாக, கஞ்சா விற்பனை பற்றி அவர் காவல் துறையிடம் புகார் கூறியதால், அவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்நிகழ்வு தமிழகத்தில் சட்டம்–*

2023 மார்ச் 29] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

ஒழுங்கு எவ்வளவு மோசமான நிலையில் உள்ளது என்பதை வெட்டவெளிச்சமாகக் காட்டுகிறது. இதனை நான் மிகுந்த மனவேதனையுடன் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். தமிழகக் காவல் துறைத் தலைவர் DGP அவர்கள், தமிழகத்தில் கஞ்சா விற்பனையை முற்றிலும் ஒழிக்க Operation Ganja Vettai 2.0 என்ற திட்டத்தை அறிவித்தார். ஆனால், இது முழுமையாகச் செய்யப்படாத காரணத்தினால், இப்படிப்பட்ட நெஞ்சைப் பதற வைக்கும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இனியாவது, அரசு இத்தகைய குற்றவாளிகள்மீது இரும்புக்கரம் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றேன். போதைப் பொருட்களின் பிடியிலிருந்து மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் சமுதாயம் விடுபட வேண்டுமென்றும், கஞ்சா வியாபாரிகள் பற்றி தகவல் கூறுபவர்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்ய வேண்டுமென்றும், அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுசம்பந்தமாக (குறுக்கீடு) உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். இதுசம்பந்தமாக, பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. ஜி.கே. மணி அவர்கள், திரு. இரா. அருள் அவர்கள், திரு. ச. சிவகுமார் அவர்கள் ஆகியோரும் கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள்.

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

திருநெல்வேலி, அம்பாசமுத்திரம் உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேலும், திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், உதவி காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கைகள்மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், திரு. தி. வேல்முருகன் அவர்கள், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், திரு. செ. கிருஷ்ணமுரளி அவர்கள், திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், திரு. V.P. கந்தசாமி அவர்கள், திரு. K.C. கருப்பணன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அம்பாசமுத்திரம் A.S.P.–ஐப் பற்றி மட்டும் பேசுங்கள். மற்றதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் அதைப் பற்றி மட்டும் கருத்தைச் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *சரி. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், அவர்களுக்கு முறையான பயிற்சி அளித்து, அவர்கள் மனம் பக்குவப்பட்டு, பொதுமக்களை எப்படி அணுக வேண்டும், விசாரணைக் கைதிகளை எப்படி அணுக வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அவர்கள் பணியாற்ற நமது அரசு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும். (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். இதில் இரண்டுவிதமான கருத்துகள் இருக்கின்றன. கஞ்சா, அபின், போதை மாத்திரைகள்; கல்லூரிகள், பள்ளிகளின் அருகே பல இடங்களில் விநியோகிக்கப்பட்டதாகவும், இவர் நேர்மையாகவும், IIT–ல் படித்த gold medalist என்ற காரணத்தாலும், நேர்மையாக தன்னுடைய கோட்டத்தை வைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத் தீவிரமாகப் பணியாற்றி இந்தத் தொழில்களில் ஈடுபட்டவர்களின்மீது கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் அங்கே ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைத் தீர விசாரித்து, விசாரணைக் கைதிகள்மீது இவரே தண்டனை கொடுப்பது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரையை முடியுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *முடித்துவிடுகிறேன். தண்டனை கொடுப்பது தவறு என்பதை உணர்த்துகின்ற வகையில் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

முற்பகல் 11–25

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

வியாசர்பாடி, அ.தி.மு.க. நிர்வாகி, திரு. இளங்கோவன் கொலை செய்யப்பட்டது—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

2023 மார்ச் 29]

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள், முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், திரு. இரா. அருள் அவர்கள், திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், திரு. வி.பி. நாகைமாலி அவர்கள் மற்றும் திரு. தி. வேல்முருகன் உள்ளிட்ட பலரும் இதுகுறித்து தங்களது கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறார்கள்.*

அ.தி.மு.க. பெரம்பூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இளங்கோவன் என்கிற வியாசை இளங்கோ என்பவர், நேற்று முன்தினம் 5 பேர் கொண்ட கும்பலால் கத்தியால் வெட்டப்பட்டு, ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டார். அவரது மனைவி திருமதி சுமலதா கொடுத்த புகாரின் அடிப்படையில், செம்பியம் காவல் நிலையத்தில் கொலை வழக்கு பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, விசாரணையில் கொலையுண்ட இளங்கோ 2 ஆண்டுகளுக்கு முன்பு சஞ்சய் என்பவரை பொதுவெளியில் வைத்து தாக்கியதாகவும், அந்த முன்விரோதம் காரணமாக சஞ்சய் இந்த கொலைத் திட்டத்தைத் தீட்டியுள்ளதும் தெரியவந்தது. காவல் துறையினர், இரவோடு இரவாக 2 மணி நேரத்தில், வழக்கில் தொடர்புடைய சஞ்சய், கணேசன், கௌதம், வெங்கடேசன் மற்றும் அருண்குமார் ஆகிய 5 குற்றவாளிகளைக் கைது செய்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் இளஞ்சிறார் குற்றவாளி.

மேலும், கொலை செய்யப்பட்ட இளங்கோ போதைப்பொருளுக்கு எதிராக இருந்ததாகச் சொல்லப்படுவது குறித்து விசாரணையில் இதுவரை தெரியவில்லை. இச்சம்பவம் குறித்த புலன்விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட இங்கு உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.